அப்போதுதான் இந்தத் தீர்ப்பில் பரிந்துரைத்தப்படி காவிரி மேலாண்மை வாரியம், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை ஏற்படுத்த முடியும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் நீங்கள் ஏற்படுத்த முடியும். (குறுக்கீடு) என்ன, நீங்கள் என்னைப் பேச விடாமல் தடுக்கிறீர்கள்? (குறுக்கீடு) சரி பேசுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: Tribunal தீர்ப்பில் ஏதாவது குறை இருந்தால், அந்த aggrieved party, பாதிக்கப்பட்டவர்கள், Section 5-சி-யின்படி இன்னென்ன வகைகளில் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்று Tribunal-லில் ஒரு petition கொடுக்கலாம். அந்த petition மீது Tribunal-ல் ஓர் ஆண்டுக்குள் ஒரு முடிவு எடுக்க வேண்டும். முடிவெடுத்து, அதை மத்திய அரசிற்கு அனுப்ப வேண்டும். மத்திய அரசாங்கம் அதன்மீதுதான் ஒரு G.O. போட்டு அரசிதழில் வெளியிடும். ஆனால், இப்போது எங்கு வழக்கு மாட்டி நிற்கிறது என்றால், நாம் Supreme Court-க்கு சென்றவுடன், கர்நாடக அரசும் Supreme Court-க்குப் போய்விட்டது. மற்ற மாநிலங்கள் போனவுடன், Supreme Court-ல் case இருக்கிறது, ஒரே வழக்கு Tribunal-லும் Supreme Court-லும் இருப்பதால், Tribunal-லில் Supreme Court-லிருந்து judgement வரட்டும், அதன் பிறகு இவ்வழக்கை எடுக்கிறேன் என்கிறார்கள். Supreme Court-ல் Expedite petition போட்டிருக்கிறோம், இப்போது அது நடந்து கொண்டிருக்கிறது. ஆகையினால், "நீங்கள் மத்திய அரசில் ஒரு அங்கமாக இருப்பதால் உடனே மத்திய அரசு வெளியிடும் அரசிதழில் வெளியிட முடியாதா? ஏன் போடவில்லை?" என்று நீங்கள் கேட்டால் சட்டப்படி அவ்வாறு செய்ய இயலாது. உங்கள் அம்மா கேட்கிற மாதிரியெல்லாம் மத்திய அரசும் ஆட முடியாது, நாங்களும் ஆட முடியாது; நீங்கள் ஆடலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் காவிரிப் பிரச்சினை—அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த 1967-68-லேயிருந்து ஆரம்பமாகி, இதுவரையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அண்ணா அவர்களுக்குப் பிறகு நான்—எனக்குப் பிறகு அருமை நண்பர் எம்.ஜி.ஆர்.—இடையிடையே நம்முடைய பன்னீர்செல்வம்

போன்றவர்கள்—அடுத்து இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அம்மையார் அவர்கள்; அதற்கடுத்து பல ஆண்டுக் காலமாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமலேயே இருந்து வருகிறது. அதைப்பற்றி நாம் நடத்துகிற விவாதமும் தீராமல் இருக்கிறது. ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதிலேயே—நேற்றைக்குக்கூட இங்கே பேசும்போது சொன்னார்கள்—ஒருவருக்கொருவர்—இரண்டு கட்சிகளும் குற்றஞ்சாட்டுவதிலே பொழுது போக்குவதைத் தவிர, பிரச்சினைகளைத் தீர்ப்பதிலே ஒன்றாகக் கலந்து முடிவு செய்யவில்லை என்பதை எடுத்துச் சொன்னார்கள்.

அதைச் செய்வதற்கு, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், நாங்கள் தயாராக இருக்கிறோம்—அவர்களும், அவர்களுடைய கட்சித் தலைமையிடத்திலே அனுமதி பெற்று, எனக்கு ஒப்புதல் தருவார்களேயானால், மிக நன்றாக இருக்கும். எதற்கென்றால், இந்தப் பிரச்சினையைப் பற்றி சட்டமன்றப் பேரவையிலும், வெளியிலும் ஒருவருக்கொருவர் ஏடாகூடமாக, ஏட்டிக்குப் போட்டி என்ற முறையிலே பேசி—இது கர்நாடக அரசுக்கு ஒரு புதிய தெம்பை உருவாக்குவதற்கு மாறாக, நாம் நம்முடைய குறிக்கோளை அடைவதற்கு ஏதுவாக, தினமும் இந்தப் பிரச்சினையைப் பற்றி பொது மேடையிலோ அல்லது சட்டமன்றத்திலோ பேசி, யார் செய்தது சரி, யார் வழக்கை நடத்தியது சரி, யார் வழக்கை ஒத்தி வைத்தது சரி என்றெல்லாம் விவாதிக்காமல், ஒன்றாக உட்கார்ந்து, அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் மீண்டும் ஒருமுறை உட்கார்ந்து பேசி, நமக்குள்ளே யார் அதற்குக் காரணம் என்பதைத் தீர்மானித்து, ஒரு முடிவெடுப்பது நல்லதாக இருக்கும். அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் தயாராக இருந்தால், காவிரிப் பிரச்சினை தீர்ந்த மாதிரிதான்.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் நேற்றையதினம் இந்தப் பிரச்சினை குறித்து நான்தான் இந்த அவையிலே பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னேன். காவிரி